**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 72 of 2022

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : திருமதி.சாராம்மாள்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of August** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் மதுக்கரை வனச்சரக அலுவலகத்தில் தனிப்பணிபிரிவு வன அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2019 ம் தேதியன்று நான் கோவை வனச்சரகம் தடாகம் பிரிவு வனவராக பணிபுரிந்தபோது OLX தளத்தில் தடை செய்யப்பட்ட வன உயிரினமான பவளப்பாறைகள் விற்பனைக்கு இருப்பதாக பதிவேற்றம் செய்து இருந்ததாக கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததை தொடர்ந்து எனது தலைமையில் வனக்காப்பாளர் ஜெயபிரகாஷ் மற்றும் வனக்காப்பாளர் நாகராஜன் ஆகிய குழுவினர் எதிரி வீட்டிற்கு சுமார் மாலை 5 மணி அளவில் தடை செய்யப்பட்ட வன உயிரினங்கள் விற்பனை செய்வது குறித்து விசாரணை மேற்கொண்டதில் அவர் பவளப்பாறைகள் இருப்பதை ஒப்புக்கொண்டார்.

2. மேலும் அதனை அழகுக்காக மீன் தொட்டியில் வைத்திருந்ததாகவும் தொடர்ந்து துருநாற்றம் வீசிக் கொண்டிருந்ததால் மேற்படி பவளைப்பாறைகளை விற்பனை செய்வதாக முடிவு செய்து olx ல் பதிவேற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டார். மேலும் எதிரி எங்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்த 6 எண்ணிக்கையிலான பவளப்பாறைகளை வனக்காப்பாளர் நாகராஜன் மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்து மகசரில் கைப்பற்றினேன். மேலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஸ்தல மகஜர் அதே சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்தேன்.மகஜர் **அ.சா.ஆ.1** மற்றும் ஸ்தல மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் ஜெயபிரகாஷ் பதிவு செய்தார். அதில் நான் மேற்குறிப்பு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

3. SCHEDULE 1ன் படி தடைச்செய்யப்பட்ட பொருட்களை விற்பனைக்காக வைத்திருப்பதும் உடமையில் இருப்பதும் குற்றம் என எதிரிக்கும் தெரிவித்து எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் எதிரியை வனச்சரக அலுவலகத்தில் ஆஜர் செய்தேன். H நமூனா தயவு செய்து பின்னர் WLOR. 7/2019 குற்ற எண் பதிவு செய்தேன். பின்னர் மேல் நடவடிக்கைகாக வனச்சரக அலுவலரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். H நமூனா **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்பொழுது நீதிமன்றத்தில் இறந்த நிலையில் உள்ள பவளப்பாளைகளை தான் நான் எதிரிகளிடமிருந்து கைப்பற்றினேன். பவளப்பாறைகள் 6 எண்ணிக்கை **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் எதிரி ஓஎல்எக்சில் பதிவேற்றம் செய்ததை எனது விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் சொல்வது போல் எதிரி ஓஎல்எக்சில் பதிவேற்றம் செய்திருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரி ஓஎல்எக்சில் பதிவேற்றம் செய்து இருந்தார் என சொல்லி உள்ள நிலையில் மேற்படி பதிவுகளை வழக்கு ஆவணத்துடன் இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பதிவுகளை பார்வையிட்டால் தான் எதிரி மீன்கள் விற்பனைக்கு பதிவேற்றம் செய்திருந்தாரா என்பது குறித்து தெரியவரும் என்றால் சரிதான். மகஜர் மற்றும் ஸ்தல மகசரில் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்பதற்கான நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.மேற்படி எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் உயிரிழந்த நிலையில் இருந்த பவளப்பாறைகளின் எடை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எண்ணிக்கைகள் மட்டும் சொல்லி உள்ளோம்.

2. பொதுவாக பவளப்பாறை மற்றும் கடலில் இருக்கும் கல் இரண்டும் ஒன்றைப் போலவே இருக்கும் என்றால் சரியல்ல. பவளபாறைகளை பார்த்தாலே பவளப்பாறை என தெரிய

வரும்.எதிரி மேற்படி பவளப்பாறைகள் எங்கிருந்து கொண்டு வந்து வைத்தார் என்பதற்கான விபரத்தை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் வாங்கிக் கொண்டு வைத்திருந்ததாக சொன்னார், எங்கு வாங்கினார் என தெரியாது. எதிரி மேற்படி பவளப்பாறைகளை தங்கேஸ்வரன் என்பவரிடம் இருந்து வாங்கியதாக சொல்லி உள்ளார். ஆனால் அது சம்பந்தமாக எங்களது விசாரணையில் தெரிய வரவில்லை. நான் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் பவளப்பாறைகள் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி கற்கள் LIMESTONE என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.18 18:33:44 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**